வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
# ஈழநாடு
Eelanadu
ஈழநாடு (in Sinhala script)
விலை ரூ. 30/=

## ஜனாதிபதியுடன் தமிழரசு அடுத்த வாரத்தில் சந்திப்பு

கொழும்பு, நவ. 15
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில், அடுத்த வாரம் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும், ஜனாதிபதி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.
நேற்று, பாராளுமன்றத்தில், வரவு செலவுத் திட்டம் குறித்து, 07

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 15.11.2025 சனிக்கிழமை இதழ் : 319 பக்கங்கள் : 08

## பிரிட்டன் செல்கிறார் ரில்வின்!



கொழும்பு, நவ. 15
இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ட்ரூ பற்றிக் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் பத்தரமுல்லை பெலவத்தை மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.
இலங்கையின் நிகழ்கால அரசியல் நிலைமைகள் பற்றியும் பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவுகின்ற நீண்டகால நட்புறவு பற்றியும் இதன் போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.
குறிப்பாக, பிரித் தானியா எதிர்காலத்தில் 07

# பேரணிகள் நடத்துவதால் எங்களை மிரட்டமுடியாது!

### எம்முடன் விளையாடவேண்டாம் என எச்சரிக்கிறார் ரில்வின் சில்வா



கொழும்பு, நவ. 15
அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக எதிரணிகளால் 5 ஆயிரம் பேரை திரட்ட முடியுமெனில், அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக 50 ஆயிரம் பேருடன் களமிறங்கக்கூடிய வலுவான அரசியல் கட்டமைப்பு எம் வசம் உள்ளது என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.
எப்படி பேரணி நடத்த வேண்டும் என செய்து காட்டியவர்கள் நாம். எனவே, 3000 ,4000 பேரை திரட்டி எம்மை மிரட்ட முடியாது என்றும் அவர் கூறினார்.
36 ஆவது கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்தம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் விஹாரமஹாதேவி திறந்த வெளிய ரங்கில் நேற்று முன் தினம் நடைபெற்றது.
இந்நிகழ்வில் கலந்து கொண்டு 07

## வாக்கெடுப்பிலிருந்து விலகியமை நல்லெண்ண அடிப்படையிலானது!

### சாணக்கியன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, நவ. 15
2026 ஆம் ஆண்டு பாதீட்டின் இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பிலிருந்து விலகியமை நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா சமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.
பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்- 07

## அநாகரீகமான வார்த்தைகளை சபைக்குள் பயன்படுத்தத் தடை!

கொழும்பு, நவ. 15
பாராளுமன்ற சபை நடவடிக்கைகளின் போது, பொருத்தமற்ற, அநாகரீகமான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அறிவித்துள்ளார்.
நேற்றைய பாராளுமன்ற சபை நடவடிக்கையின் ஆரம்பத்தில், சபாநாயகரின் அறிவித்தலாக அவர் இதனை குறிப்பிட்டார்.
சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அநாகரீகமான வார்த்தைப் 07

## பொது எதிரணியில் இணைய கஜேந்திரகுமார் இணக்கம்!

கொழும்பு, நவ. 15
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள பொது எதிரணியில் இணைவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தீர்மானித்துள்ளது.
அதன்படி, தமது தீர்மானத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளிப்படுத்தியுள்ளார்.
ஜனநாயகத் திற்கு எதிராக 07


## 118 மேலதிக வாக்குகளினால் நேற்று நிறைவேறியது வரவு-செலவுத் திட்டம்!

கொழும்பு, நவ. 15
2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 118 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
ஆதரவாக 160 வாக்குகளும் எதிராக 42 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.
இதேவேளை பாதீட்டு வாக்கெடுப்பில் 8 உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. அதன்படி பாதீட்டின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 118 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்திருந்தார்.
எனினும் 07

## இலங்கைக்கான 5ஆவது மதிப்பாய்வு; அடுத்த வாரம் கூடும் நாணய நிதியம்

கொழும்பு, நவ. 15
இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் ஐந்தாவது மதிப்பாய்வை இறுதி செய்வதற்காகச் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக குழு, எதிர்வரும் வாரங்களில் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இதன்போது இலங்கைக்கு 347 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவிக்கான தீர்மானம் எட்டப்படவுள்ளது.
செய்தியாளர் சந்திப்பில் இந்த தகவலை வெளியிட்ட, நிதியத்தின் தகவல் தொடர்பு பணிப்பாளர் ஜூலி கோசாக், 2025, ஒக்ரோபர் 9 அன்று, சர்வதேச நாணய நிதிய பணியாளர்களுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையே பணியாளர் மட்ட ஒப்பந்தம் எட்டப்பட்டதை உறுதிப்படுத்தினார்.
இந்த நிலையில், 07

## தேர்தல் ஆணையாளர் நாயகமாக ரசிக பீரிஸ் நேற்று பொறுப்பேற்பு



கொழும்பு, நவ. 15
புதிய தேர்தல் ஆணையாளர் நாயகமாக ரசிக பீரிஸ் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.
தேர்தல் ஆணையாளர் நாயகமாக கடமையாற்றிய சமன் சிறீ ரத்நாயக்க நேற்று முன் தினம் முதல் தனது பதவியிலிருந்தும் 07

## வடக்கு மக்களின் பிரச்னைகளுக்கு வரவு-செலவு திட்டத்தில் தீர்வில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 15
பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பள அதிகரிப்பை நாங்கள் எதிர்க்கவில்லை. பெருந்தோட்ட தமிழர்களுக்கும், வடக்குத் தமிழர்களுக்கும் வரலாற்று காலம் முதல் இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். வடக்கு மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தீர்வேதும் 07

## அனைத்து வைத்தியசாலைகளும் மத்திய சுகாதார அமைச்சின் கீழ்!

கொழும்பு, நவ. 15
அனைத்து வைத்தியசாலைகளையும் மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவர விரும்புவதாக, சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
பூரண மருத்துவ சிகிச்சை முறைகளைக் கொண்ட 7 மருத்துவமனைகள் மாத்திரமே சுகாதார அமைச்சின் கீழ் உள்ளடங்காமல் இருப்பதாக அவர் தெரிவித்தார்.
பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். 07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச நீரழிவு தினமான நேற்று யாழில் நடைபவனி முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், நவ. 15

சர்வதேச நீரழிவு தினமான நேற்று, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினரால் யாழில் நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச நீரிழிவு தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அதன் தடுப்பு மற்றும் சிகிச்சையின் அவசியத்தை வலியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த நாள் அமைந்துள்ளது.

இந்தநிலையில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட நடைபவனியில், “நீரிழிவு என்பது ஒரு பேரழிவு. வேண்டாம் இந்த சீரழிவு. நாம் கண்டோம் எத்தனை பேரழிவு. இனியும் ஏன் இந்த வாழ்வு எமக்கு என்ற கருப்பொருளுடன் யாழ்ப்பாண வைத்தியசாலை சமூகம் யாழ் நீரழிவுச் சங்கம் மற்றும் யாழ் மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் ஐந்து கிலோ மீற்றர் நீரழிவு நடைபவனி நடைபெற்றது.

நடைபவனியில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், பேராசிரியர்கள், தாதிய மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (அ)

## களுத்துறை இளைஞர்களால் பளை பகுதியில் சிரமதானம்



கிளிநொச்சி, நவ. 15

இளைஞர் பரிமாற்று வேலை திட்டத்தின் கீழ், கிளிநொச்சி - பளை பகுதியில் களுத்துறை இளைஞர்களால் நேற்று சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வரும் இளைஞர் பரிமாற்று வேலைத் திட்டத்தின் கீழ், களுத்துறை மாவட்டத்தை சேர்ந்த இளைஞர்கள் யுவதிகள் கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளனர்.

வருகை தந்த இளைஞர் யுவதிகளால் நேற்றுக் காலை மாசார் சிறுவர் ஆனந்த சுற்றுப் பகுதியில் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

சிரமதானப் பணியில் கிளிநொச்சி மாவட்டத்துக் குட்பட்ட இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் மாசார் கிராம அலுவலர், பச்சிளைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் சுஜீபன், கிராம மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் குறித்த இளைஞர் யுவதிகளால் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறுபட்ட செயற்பாடுகள் முன்னெடுக்க படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நவீன முறையிலான பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதில் கூடுதல் கவனம் தேவை!

### வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ. 15

பாரம்பரிய முறையிலான பயிர்ச்செய்கையை விட நவீன முறையில் அண்ணளவாக இருமடங்கு விளைச்சல் கிடைக்கப்பெறுவதாகவும், அதனை விவசாயிகளிடத்தில் ஊக்குவிப்பதில் அடுத்த ஆண்டில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமெனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.


வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்களை ஆராயும் கலந்துரையாடல் நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் முன்னேற்றங்கள் தனித்தனியாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டன. ஒவ்வொரு திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் காணப்படும் இடர்பாடுகள் குறித்தும் ஆளுநர் தனிப்பட்ட கவனம் செலுத்தினார்.

விவசாய அமைச்சின் கீழ் சமூகக் கூட்டுறவுப் பொறுப்பு நிதி ஊடாக முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் நன்னீர் மீன்பிடி தொடர்பிலும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. விவசாயத்துடன் தொடர்புடைய தகவல் திரட்டல்கள் துல்லியமாக இருக்க வேண்டும் என வலியுறுத்திய ஆளுநர், அடுத்த ஆண்டுக்குள் இதை உறுதி செய்ய வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் ஆராயப்பட்டபோது, யாழ்ப்பாணத்தின் ஆட்டிறைச்சிக்கான மதிப்பு சுற்றுலாதுறைக்கும் முக்கிய பங்காற்றுவதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் நிதி, பிரதித் திட்டப் பணிப்பாளர், வடக்கு மாகாண கட்டடங்கள் திணைக்கள பணிப்பாளர், விவசாயத் திணைக்கள பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர், கால்நடை அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர், மாவட்ட பணிப்பாளர்கள், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## மண்டானில் பனம் விதை நாட்டினார் திருமாவளவன்



யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள தமிழ் நாடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யின் தலைவர் தொல் திருமாவளவன் நேற்று வடமராட்சி - மண்டான் உப்பு வீதி பகுதியில் பனை விதைகளை நாட்டிவைத்தார்.

மரம் நடுகை மாதத்தில், வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்பாட்டில் குறித்த பனம் விதை நடுகை நிகழ்வு இடம் பெற்றது.

இதில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள், பணியாளர்கள், உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டு பனம் விதைகளை நாட்டிவைத்தனர். (அ)

## வடமாகாணத்தில் விரைவில் நூலக சேவைகள் பணியகம்

### ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 15

வடக்கு மாகாணத்தில் நூலக சேவைகள் பணியகம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான குழுவினர் ஆளுநரை சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இலங்கையின் சில மாகாணங்களில் ஏற்கனவே மாகாண மட்டத்திலான நூலக சேவைகள் பணியகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் மாவட்ட மட்டமும், பிரதேச செயலக மட்டமும் சார்ந்த நூலக சேவைகள் பணியகங்கள் செயல்பட்டு வருவதாக அவர்கள் தெரிவித்தனர். அதேபோன்று மாகாண பொது நூலகம் மற்றும் மாவட்ட பொது நூலகங்களும் இதன் கீழ் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன எனவும் ஆளுநருக்கு விளக்கினர்.

வடக்கு மாகாணத்தில் நூலக சேவைகள் பணியகம் உருவாக்கப்படும் என்ற யோசனையை ஆளுநர் வரவேற்று, அதற்குத் தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

இலத்திரனியல் நூலக சேவைகளை விரிவுபடுத்தவும், அதற்கான பயிற்சிகளை வழங்கவும் தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள்சபை எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஆளுநர் நன்றியைத் தெரிவித்தார்.

அதேவேளை, புத்தக வெளியீட்டுக்கான உதவிகளைக் கோரி வடக்கு மாகாணத்திலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் குறைவாக உள்ளன என்ற தகவலை தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபை முன்வைத்தது.

இதற்கு பதிலளித்த ஆளுநர், உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக தேவையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார்.

கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாணம் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஆளுநரின் உதவிச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## வடக்கு மாகாண சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது குறித்து ஆராய்வு

முல்லைத்தீவு, நவ. 15

வடக்கு மாகாண சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சுற்றுலாத் துறையின் அனுசரணையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கைகள் பீடத்தின் நெறிப்படுத்தலில் இந்த கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாம கேஸ்வரன் தலைமையில் நடை பெற்றது.

இக் கலந்துரையாடலில் வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபாரக்கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் யோ. நந்த கோபன் தந்திரோபாய சுற்றுலா திட்டமிடலுக்கான சிறப்பு வளவாளராக கலந்து சிறப்பித்து தரவுகளைப் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் எம்.பத்திநாதன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.மஞ்சுளாதேவி, சிரேஷ்ட விரிவுரையாளர்களான திருமதி மதிவதனி, சிவநேந்திரா மற்றும் ருகுணு பல்கலைக்கழக கலாநிதி சம்பிக லியனகே, பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வனவள அதிகாரிகள், வனஜீவராசிகள் அதிகாரிகள், பொறியியலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அனுபவம் சார்ந்த உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
04.11.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நினைவேந்தலில் போட்டி?

யாழ்.மாகாநகர சபை மாவீரர் நினைவேந்தலை செய்ய முடியாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் தெரிவித்திருக்கின்றார். நினைவேந்தலை அவர்கள் செய்ய வேண்டும் - அவர்கள் செய்யக் கூடாது என்னும் தீர்மானத்தை எவ்வாறு ஒரு அரசியல் கட்சி மேற்கொள்ள முடியும்?

திலீபனின் நினைவேந்தலின்போது அஞ்சலி செலுத்துவதற்கு சென்ற தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் திருப்பி அனுப்பப்பட்டார். நினைவேந்தல் என்பது விரும்புவர்கள் அஞ்சலி செலுத்துவதற்கான ஒரு நிகழ்வு அதனை தடுக்கும் உரிமை எவருக்கும் இல்லை. அது நாகரீகமும் அல்ல ஆனாலும் இவ்வாறான அநாகரிகங்கள் தொடர்ந்தும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

யுத்தத்தின்போது. தங்களின் உறவுகளை இழந்தவர்களுக்கு நினைவு கூர்வதற்கான உரிமை என்னும் அடிப்படையிலேயே இது முக்கியத்துவம் பெறுகின்றது. மற்றும்படி நினைவேந்தல்களால் மக்கள் தேசமாக திரள்கின்றனர் என்பதெல்லாம் வெறும் புனைவுகள் மட்டுமே. ஆனால் யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகளின் பின்னர். ஒரு நினைவேந்தல் நிகழ்வைக் கூட, ஒற்றுமையா முன்னெடுக்க முடியாதவர்களாகவே தமிழ் சமூகம் இருக்கின்றது என்பதுதான் கசப்பான உண்மை.

யுத்தத்திற்கு பின்னரான அரசியல் சூழலை எதிர்கொள்வதில் கூட்டாக விடயங்களை கையாள்வது ஒரு முக்கியமான விடயமாகும். ஆனால் தமிழ்ச் சூழலில் அவ்வாறான நிலைமையை காண முடியவில்லை. விடயங்களை குத்தகைக்கு எடுத்துக் கொள்ளும் மனோபாவமே மேலோங்கியிருக்கின்றது. முள்ளிவாய்க்காலில் இவர்கள்தான் பங்கு கொள்ள வேண்டும் என்று கூறி தங்களுக்கு விருப்பம் இல்லாதவர்களை தடுப்பது.

அரசியல்கட்சிகளை தவிர்க்க விரும்பினால் அனைத்து கட்சிகளையும் பொதுவில் வைக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட கடசியை ஓரங்கட்டுவது. குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்த சிலரை ஓரங்கட்டுவது என்னும் வகையில் நினைவேந்தல்களை முன்னெடுக்க முயற்சிப்பது. அடிப்படையில் உயிரிழந்தவர்களை அவமதிக்கும் ஒரு செயலாகும்.

மாவீரர் தினம். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஆகியவற்றுக்கு மக்கள் வருவது. அவர்களது உறவுகளை நினைவு கூர்வதற்காகவே தவிர. அரசியல் கட்சிகளுக்கு நற்சான்றிதழ் வழங்குவதற்காக அல்ல. கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் போது. தனது மகளை எண்ணி ஒப்பாரி வைக்கும் ஒரு தாயார் - இந்த இடம்தானா மகளே உனக்கு கிடைத்தது. ஓடித் தப்பியிருக்கலாமே - என்று கூறி. தனது அழுகின்றார். இதுதான் பாதிக்கப்பட்டவர்களின் உண்மையான உணர்வு.

தங்களுடைய பிள்ளைகள் வீரமரணம் அடைய வேண்டும் என்று எந்தவொரு பெற்றோரும் விரும்பவில்லை. ஆனாலும் குறிப்பிட்ட அரசியல் சூழலில் ஒவ்வொருவரும் தங்களின் சுயவிருப்பின் பெயரில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டனர். பெரும் பாலானவர்களுக்கு தங்களுடைய பிள்ளைகள் எவ்வாறு இறந்தனர் என்பது கூட தெரிந்திருக்க வாய்பில்லை. இவ்வாறான பின்னணியிலேயே, ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட இடங்களில் மக்கள் ஒன்று கூடுகின்றனர். அவ்வாறு ஒன்று கூடுபவர்கள் அனைவருமே ஏதோவொரு வகையில் தங்களுடைய உறவுகளை இழந்தவர்கள். அவர்களுக்காக அழுது. தங்களை ஆற்றுப்படுத்திக் கொள்வதற்காகவே அவ்விடம் நோக்கி வருகின்றனர். ஆனால் எதனையுமே இழக்காதவர்கள், தங்களின் கற்பனைகளில் விளக்க உரைகளை எழுதிக் கொண்டிருக்கின்றனர். இப்படியானவர்களின் கண்ணீரை தங்களுடைய தேர்தல் அரசியலுக்கான முதலீடாக்கிக் கொள்ள முயற்சிப்பதானது அடிப்படையிலேயே மோசமான தொரு செயலாகும்.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025

"கூர்மையாகச்செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்."
- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)



# மாகாண சபைகள் தேர்தலை முடிந்தால் நடத்தி காட்டுங்கள்

## அரசுக்கு சவால் விடுத்தது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, நவ. 15

மாகாண சபை தேர்தலை எதிர்பார்த்து இருக்கிறார்கள். முடிந்தால் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கிறேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியை தடை செய்து இந்த நாட்டில் ஊழல் மோசடிகளில் யாராவது ஈடுபட்டிருந்தால் அவர்களைவிட நாட்டின் அபிவிருத்திக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியும் விடுதலை புலிகளும் ஈடுபட்டு வந்திருக்கின்றன.

மக்கள் விடுதலை முன்னணி அமைக்கப்பட்டு 60 வருடங்களில் இந்த நாட்டை ஆட்சி செய்துவந்த அனைத்து அரசாங்கங்களுக்கும் எதிராக செயல்பட்டு வந்தது. இதேபோன்று வெளிநாட்டு ஒப்பந்தங்களுக்கு எதிராக செயல்பட்டு வந்தார்கள். ஆனால், மக்கள் விடுதலை முன்னணி இன்று எமது வெளிநாட்டுக் கொள்கை, கல்விக் கொள்கை, பொருளாதார கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அன்று இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்காவிட்டால் நாடு அபிவிருத்தியடைந்திருக்கும்.

எனவே, வரவு - செலவு திட்டத்தில் அரசதுறை, தனியார் துறை என யாருக்கும் எந்த நன்மையும் இல்லை. அதனால் மக்கள் அரசாங்கத்துக்கு பதிலளிக்க மாகாண சபைகள் தேர்தலை எதிர்பார்த்திருக்கிறார்கள். அதனால் முடிந்தால் அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை நடத்தட்டும்.

பொதுத் தேர்தலைவிட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்துக்கு 23இலட்சம் வாக்குகள் குறைவடைந்தன. மாகாண சபைகள் தேர்தலை நடத்தினால் மேலும் 25 இலட்சம் வாக்குகள் இல்லாமல் போகும். அதனால் முடிந்தால் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கிறேன் - என்றார். (ஐ)

# வனஜீவராசி பணிமனை அதிகாரி ஒருவர் கைது!

கொழும்பு, நவ. 1

10 ஆயிரம் ரூபாய் பணத்தை இலஞ்சமாகக் கோரி பெற்ற தெஹியத்தகண்டி வனஜீவராசிகள் பணிமனை அதிகாரி ஒருவர் இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக் குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.


தெஹியத்தகண்டியை சேர்ந்த நபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்திருந்த இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை சந்தேகநபரான அதிகாரியை கைது செய்திருந்தனர்.

முறைப்பாட்டாளரால் தேக்கு மரம் ஒன்றை வெட்டுவதற்கான இரு அனுமதிப் பத்திரங்களை தயாரிப்பதற்கு தேவையான ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஒரு அனுமதிப்பத்திரத்துக்கு 5 ஆயிரம் ரூபாய் பணத்தை கோரியிருந்தார். பின்னர் முறைப்பாட்டாளரிடமிருந்து 10 ஆயிரம் ரூபாய் பணத்தை இலஞ்சமாக பெற்றார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான அதிகாரியை தெஹியத்தகண்டி வனஜீவராசிகள் பணிமனையின் பின்புறம் உள்ள வனப்பகுதியில் வைத்து அதிகாரிகள் கைது செய்திருந்தனர். கைதான சந்தேக நபர் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் - 15 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஐப்பசி 29
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகாதசி




**மேடம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீரகள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உதவுவார்கள். கனவு நனவாகும்.

**இடபம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். நன்மை நடக்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டு. உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். துணிச்சலுடன் செயல்படும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவி அன்யோன்யம் பிறக்கும். தோற்றப்பொலிவுக் கூடும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சக ஊழியர்களிடம் ஒற்றுமை அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். முன்னேறும் நாள்.

**துலாம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி. உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**விருச்சிகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**தனுசு**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. புதிய சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

# உணவு பாதுகாப்பை உறுதி செய்ய உணவு உற்பத்தி தரவுகள் அவசியம்

**வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர்**

யாழ்ப்பாணம், நவ. 15

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உணவு உற்பத்தி தரவுகள் மிக அவசியமாவதாகவும் அவற்றை சேகரித்து நிரைப்படுத்தல் அவசியம் என்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ். சிவசிறீ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட உணவுப் பாதுகாப்பு குழுக் கூட்டம் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் வடக்கு மாகாண கமநல சேவைகள், சுற்றாடல் அமைச்சின் செயலாளரும் மாவட்ட உணவுப் பாதுகாப்பு குழு இணைத்தலைவருமான சிவசிறீ ஆகியோரின் இணைத் தலைமையிலும் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் நிரந்தர உப குழுக்களாக திட்டமிடல் குழு, உணவுப் பாதுகாப்பு குழு மற்றும் விலைநிர்ணய குழு ஆகிய குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்க அதிபர் மற்றும் அந்தந்த மாகாணங்களின் விவசாய அமைச்சின் செயலாளர் ஆகியோரின் இணைத் தலைமையிலும் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதான தொழிலாக விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் மீன்பிடி ஆகியன காணப்படுவதாகவும் தெரிவித்தார். மேலும், அதனடிப்படையில் உணவுப் பாதுகாப்பு குழுவின் நோக்கங்களாக மாவட்டத்திலுள்ள மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, உணவு உற்பத்திகளை விநியோகித்தலை உறுதிப்படுத்தல், சந்தைப்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அணுகல் வசதிகளை விருத்தி செய்தல், சுத்தமான தண்ணீரை வழங்கல், சுகாதாரம், போஷாக்கான உணவு மற்றும் ஊட்டச்சத்து உணவுகளுக்கான அணுகல் மற்றும் போஷாக்கு கல்வியை உறுதி செய்தல், காலநிலை மாற்றம், அனர்த்தங்கள், பொருளாதார நெருக்கடிகளின் போது உணவு உற்பத்தி நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் திட்டங்களை தயாரித்தல், செயல்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வரையறை தெளிவாக காட்டப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த விவசாய அமைச்சின் செயலாளர்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடித் தொழில் ஆகியவை மிக முக்கியமான பொருளாதார நடவடிக்கைகளாக காணப்படுகின்றன. அந்த வகையில் இம் மூன்று பொருளாதார நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக முன்னெடுக்கும் போது உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். மேலும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உணவு உற்பத்தி தரவுகள் மிக அவசியமாவதாகவும் அவற்றை சேகரித்து நிரைப்படுத்தல் அவசியமானதெனவும் தெரிவித்தார்.

எனினும், இவ் தரவு சேகரிப்பு நடவடிக்கைக்காக தேவையான நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகவும் இந்த நடவடிக்கைகளை அடுத்த வருடத்தில் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்ததுடன் இந்த நடவடிக்கைகளுக்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். (எ)

# அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்டம், மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், கிராமிய அபிவிருத்தித் திட்டம், கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டம், வீடமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம், நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு, பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், மீள் குடியேற்ற வேலைத்திட்டம், விவசாயம் போன்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து அரசாங்க அதிபரால் விரிவாக ஆராயப்பட்டன. அத்தோடு, நிறைவேற்றப்பட்ட, நிறை வேற்றப்படாத திட்டங்கள் தொடர்பாக பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடப்பட்டு, உரிய அறிவுறுத்தல்கள் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக உதவி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட செயலக துறைசார் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (எ)

# ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற விளையாட்டு வீரர் ரமணனுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

23ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை சார்பில் ஒரு தங்கம் மற்றும் இரு வெள்ளிப்பதக்கங்களை வென்று சாதனை படைத்த விளையாட்டு வீரர் செல்வராசா ரமணனுக்கு நேற்று முன்தினம் யாழ். அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பொன்னாடை போர்த்தி, மலர் மாலை அணிவித்து கௌரவித்தார்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் கூறுகையில், 23ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் 3000 விளையாட்டு வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர். அதில் இலங்கையைச் சேர்ந்த 250 வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரேயொரு தமிழராக செல்வராசா ரமணன் பங்குபற்றி உயரம் பாய்தலில் தங்கப்பதக்கத்தை பெற்று சாதனை படைத்தமையுடன் முப்பாய்ச்சல், கோலூன்றிப் பாய்தல் போட்டிகளிலும் வெள்ளிப்பதக்கத்தை பெற்றுக்கொண்டமை பெருமகிழ்ச்சியை அளிப்பதாகவும் அதற்காக தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். மேலும், இவ்வாறானதொரு பல்வேறு நாடுகள் பங்குபற்றியஆசியப் போட்டியில் வெற்றியீட்டுவது என்பது கடினமான விடயம் எனவும் தான் ஒரு சர்வதேச விளையாட்டு வீரனாக இருப்பதுடன் இளம் சந்ததியினருக்கு நல்லதொரு நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விளையாட்டுத்துறை சார்ந்த பயிற்சிகளை இலவசமாக பயிற்றுவித்து வரும் விளையாட்டு பயிற்சியாளராகவும் இருந்து வருகிறார் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். மேலும், பல சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி மேன் மேலும் வெற்றிகளை பெற தனது வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார். (எ)

# முதிரை மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 15

வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து 25 முதிரை மரக்குற்றிகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன. இதன்போது சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் வைத்திருந்த குறித்த மரக்குற்றிகள் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட மரக்குற்றிகளுடன் சந்தேகநபர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை ஐயப்ப யாத்திரை புனித யாத்திரையாக பிரகடனம்

கொழும்பு, நவ. 15

**ஐயப்ப யாத்திரையை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்திய வர்த்தமானி அறிவித்தல் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது.**

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பின் வேண்டுகோளுக்கிணங்க புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவியின் ஆலோசனைப் பிரகாரம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் பரிந்துரைக்கமைய அமைச்சரவை அனுமதி பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இது, இந்து மக்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியாக கருதப்படுகிறது. இதன்படி, ஐயப்ப யாத்திரையை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்திய ஒரே நாடு என்ற பெருமையை இலங்கை பெற்றுள்ளது. (ஐ)

# எரிக்கப்பட்ட வீடுகளுக்கு நட்டஈடு; எதிரான வழக்கு ஜனவரியில் விசாரணை

கொழும்பு, நவ. 15

2022 மே 09ஆம் திகதி நாடு முழுவதும் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களின்போது எரிக்கப்பட்ட தமது வீடுகளுக்காக சட்டத்துக்கு முரணாக நஷ்டஈடு பெற்ற முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து அந்த நஷ்டஈட்டை மீண்டும் அறவிடுமாறு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை ஜனவரி 28 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட இந்த மனுவை சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையில் சட்டவிரோதமாக இழப்பீடு பெற்ற முன்னாள் மக்கள் பிரதிநிதிகளின் நிலைப்பாடு குறித்து ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# புதிய தூதுவர்கள் ஜனாதிபதியிடம் நற்சான்று பத்திரம் கையளித்தனர்



கொழும்பு, நவ. 15

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் மூவர், உயர்ஸ்தானிகர்கள் இருவர் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் நற்சான்று பத்திரங்களை கையளித்தனர்.

கனடா உயர்ஸ்தானிகர் இசபெல் மாரி கெதரின் மார்ட்டின், நெதர்லாந்து இராச்சிய தூதுவர் வீபே ஜேகோப் டி போயர், அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மெதிவ் ஜோன் டக்வேர்த், அல்ஜீரியா மக்கள் ஜனநாயக குடியரசின் தூதுவர் அப்துநோர் ஹொலிஃபி, அயர்லாந்து ஜனநாயக குடியரசின் தூதுவர் பெனடிக்ட் ஹஸ்குல்டிசன் ஆகியோர் இவ்வாறு நற்சான்று பத்திரங்களை நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்துக் கையளித்தனர் .

அவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த இணைந்து பணியாற்ற அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

# ஐஸ்டன் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 15

ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தமையால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகமை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலின்பேரில் நடத்தப்பட்ட சோதனையின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 11 கிராம் 250 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் துடுவேகெதரவைச் சேர்ந்த 33 வயதுடையவர். சம்பவம் குறித்து ராகமை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கடந்த அரசாங்கங்களைவிட தற்போதைய அரசு சிறப்பானது

## பொன்சேகா பாராட்டு

கொழும்பு, நவ. 15

இலங்கையில் கடந்த கால அரசுகள் பயணித்ததைவிட தற்போதைய அரசின் பயணம் சிறப்பாக உள்ளது என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

தேசிய மக்கள் சக்தி அரசு, ஊழல்வாதிகள் மற்றும் மோசடியாளர்களுக்கு இடமளிக்கவில்லை என்பதை நாம் ஏற்றாக வேண்டும்.

இதேபோல ஊழல் வலையமைப்பை முற்றாக இல்லாதொழிப்பதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். ஆனால், அதற்குரிய முயற்சி இந்த அரசால் எடுக்கப்படுவதை மதிக்கிறோம் - வரவேற்கிறோம்.

ரணில் விக்கிரமசிங்கதான் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார். அவரைச் சிறையில் அடைத்தபோது கவலை அடைந்தேன். எனினும், இதன்மூலம் இந்த அரசு சிறந்த முன்னுதாரணத்தை வழங்கியது. நாட்டில் அனைவருக்கும் ஒரே கரண்டியில்தான் பகிரப்படுகிறது என்பதே இதன்மூலம் வழங்கப்பட்ட செய்தியாகும். இதனை நாம் மதிக்கவேண்டும் - என்றார்.

# துசித ஹல்லொலுவ நீதிமன்றில் சரண்!

கொழும்பு, நவ. 15

கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹல்லொலுவ நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்தார்.

பொய் முறைப்பாடளித்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் முற்படத் தவறியதற்காக ஹல்லோலுவவை கைது செய்ய கொழும்பு கூடுதல் நீதிவான் லஹிரு சில்வாவுக்கு நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்தார்.

நாரஹன்பிட்டியில் குழு ஒன்று அவர் பயணித்த வாகனத்தின்மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறி ஹல்லோலுவ முறைப்பாடு அளித்திருந்தார்.

இந்த வழக்குமீதான விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது சந்தேக நபர் நீதிமன்றத்தில் முற்படவில்லை. இதனடிப்படையில், அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு பிடியாணை பிறப்பிக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிவப்பு சீனியின் தந்தையென என்னை கூறுவதால் பெருமை

## அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி

கொழும்பு, நவ. 15

சிவப்பு சீனியின் தந்தை என்று என்னை குறிப்பிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். தேசிய உற்பத்திகளை மேம்படுத்துதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கைத்தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் குறித்து எதிர்க்கட்சியினர் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் ஏதும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இதைப்பற்றி எதிர்க்கட்சியினர் எவரும் பேசுவதில்லை.

தேசிய தொழில் துறையை மேம்படுத்துவதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையை மேம்படுத்தவும் தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கவும் 8 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிவப்பு சீனி உற்பத்தியை மேம்படுத்துவதற்கு விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். ஊக்குவிக்கும் திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளன. தற்போது என்னை சிவப்பு சீனியின் தந்தை என்று குறிப்பிடுகிறார்கள். நான் மகிழ்ச்சியடைகிறேன்.

2020 முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 502 மெற்றிக்தொன் வெள்ளை சீனி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக 35 ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஆகவே, சிவப்பு சீனி உற்பத்தியை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் - என்றார். (ஐ)

# நிர்ணய விலையை மீறி அரிசி விற்பவர்மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, நவ. 15

நிர்ணய விலைக்கு மேலாக அரிசி விற்பனை செய்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், நாட்டு மக்களின் வருடாந்த அரிசி தேவை 27 இலட்சம் தொன்னாகும். இதில் வீட்டுத் தேவைக்காக 24 இலட்சம் தொன் அரிசியும் கைத்தொழில் துறைக்காக 3 இலட்சம் தொன் அரிசியும் தேவைப்படுகிறது.

இதேநேரம் உள்நாட்டு அரிசி உற்பத்தி காலத்துக்குக் காலம் மாறுபடுகிறது. கடந்த சிறுபோகத்தில் உத்தேசிக்கப்பட்ட அரிசி விளைச்சலைவிட அறுவடை செய்யப்பட்ட நெல்லின் அளவு குறைவடைந்துள்ளது. எனவே, ஓரளவு தட்டுப்பாடு காணப்படுகிறது.

மேலும், கீரி சம்பா உள்ளிட்ட சில அரிசி வகைகளுக்கு மேற்கொள்ளப்படும் விலைகள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆராயப்பட்டு வருகிறது. சில அரிசிக்கான விலைமனு கோரலின்போது, கீரி சம்பா அரிசி சந்தைக்கு நிரம்பல் செய்யப்படவில்லை. இதனால் ஒக்ரோபர் முதல் கீரி சம்பா அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. அத்துடன், அரிசி விலையை நுகர்வோர் அறிந்து கொள்ளும் வகையில் நுகர்வோர் விவகார அதிகார சபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விற்பனையாளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், கொள்வனவாளர்கள், விநியோகஸ்தர்கள், நுகர்வோர் என அனைத்துத் தரப்பினரும் விலை தொடர்பில் அறிந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. - என்றார். (ஐ)

# பெண் ஒருவரின் சொத்துகள் முடக்கம்!

கொழும்பு, நவ. 15

போதைப்பொருள், சட்டவிரோத மதுபான கடத்தல் மூலம் சொத்துகளை ஈட்டிய சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவரின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி - எஹெலிய கொடையை சேர்ந்த சந்தேகநபரின் மனைவியின் சொத்துகளே இவ்வாறு முடக்கப்பட்டன.

அந்தப் பெண்ணின் 3 கோடி ரூபாய் பெறுமதியான மூன்று காணிகளையும் எஹெலிய கொட இரத்தினபுரி வீதிக்கு அருகில் உள்ள 6 பேர்ச் காணியில் கடையுடன் கூடிய இரண்டு மாடிக் கட்டடம் என்பனவே 7 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், 45 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கு மாகாண மக்களுக்கு விசேட வீடமைப்பு திட்டம் வேண்டும்

## குகதாசன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 15

வடக்கு மற்றும் கிழக்கில் போரின் விளைவாக இடம் பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு, வீட்டு வசதித் திட்டம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இவர்களுக்கான சிறப்பு வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

வரவு - செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2026 ஆம் ஆண்டில் 100 நீர்ப்பாசனத் திட்டங்களை நவீன மயப் படுத்த 1,000 மில்லியன் ரூபாய் முன்மொழியப் பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பெரும் பகுதியை உள்ளடக்கிய வறண்ட வலயமும் இதற்கான இலக்குப் பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றி பாதீட்டில் குறிப்பிடப்பட்டாலும், இந்த வறண்ட வலயப் பகுதிகளில் நீர் மேலாண்மையின் முதுகெலும்பாக இருக்கும் போரால் கைவிடப்பட்ட, ஆயிரக்கணக்கான பண்டைய நீர்ப்பாசன குளங்களை முறையாகப் மறுசீரமைப்பதற்கு குறிப்பிட்ட ஒதுக்கீடு எதுவும் இல்லை.

எடுத்துக் காட்டாக, திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு நெற்செய்கை பண்ணப்பட்டுக் கைவிடப்பட்டுள்ள 205 சிறு குளங்களும், 25 அணைக்கட்டுக்களும் காணப்படுகின்றன. இவற்றை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் ஆண்டுக்கு அண்ணளவாக 500,000 மெற்றிக் தொன் அரிசியை உற்பத்தி செய்ய முடியும்.

இந்த விடயத்தை கடந்த வரவு- செலவுத் திட்ட எனது உரையிலும் கூறியிருந்தேன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கூறியிருக்கின்றேன். எனினும், எதுவும் நடக்க வில்லை. நடந்தால் அரிசி இறக்குமதியை குறைக்கலாம்.

தேசிய வீடமைப்புத் திட்டமானது குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை இலக்காகக் கொண்ட

'தமக்கெனதோர் இல்லம் -அழகான வாழ்க்கை' திட்டத்துக்கு 2026 ஆம் ஆண்டின் பாதீட்டில் 3,000 மில்லியன் ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஒரு தேசிய திட்டம், இதற்கு நாடு முழுவதும் உள்ள பயனாளிகள் தகுதி பெறுவர்.

எனினும், இதற்குரிய நிதி போதுமானது இல்லை. எனவே, இதற்கான நிதி ஒதுக்கம் பன்மடங்கு ஆக்கப்பட வேண்டும்.

அதிக நிலச்சரிவு அபாயத்தை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு புதிய வீடுகளை வழங்க 2,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவும் போதுமானது அல்ல. இதற்கும் நிதி ஒதுக்கம் பன்மடங்கு ஆக்கப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கில் போரின் விளைவாக இடம் பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு, வீட்டு வசதித் திட்டம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இவர்களுக்கான சிறப்பு வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் பலருக்கு அரசு குறிப்பிடும் 'தமக்கெனதோர் இல்லம் -அழகான வாழ்க்கை' பெறுவதற்கான அடிப்படை முன்நிபந்தனையான காணி சிக்கல் காணப்படுகின்றது.

இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும் இவர்களது நிலத்தை விடுவித்தல் குறித்து பாதீடு அமைதியாக உள்ளது. இந்த காணிகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டு வீடமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.- என்றார். (எ-12)


# நிலத்தில் புதைக்கப்பட்ட மோட்டார் குண்டு மீட்பு

மட்டக்களப்பு, நவ. 15

மட்டக்களப்பு - கிரான், கருங்காளியடி பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த மோட்டார் குண்டு ஒன்றை கண்ணிவெடி அகற்றும் மெகா அமைப்பினர் மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் இயங்கி வந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டு தற்போது காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், கண்ணிவெடிகளை அகற்றும் பணியை மெகா அமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த நடவடிக்கைகளின் போதே, மோட்டார் குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இதனையடுத்து விசேட அதிரடிப்படை குண்டு செயலிழக்கும் பிரிவினர் குண்டை மீட்டு, அதனை அழிப்பதற்கு நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சம்பள உயர்வுக்கு ஜனாதிபதிக்கு நன்றி: 25 நாட்கள் பணி நிபந்தனைக்கு எதிர்ப்பு

கொழும்பு, நவ. 15

வரவு- செலவுத் திட்டம் மூலம் பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஜனாதிபதிக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அதேநேரம் 25 நாட்கள் தொழிலுக்கு சென்றால்தான் இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்றால், அதற்கு நாங்கள் எதிர்ப்பு. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு- செலவுத் திட்ட உரை மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

வரவு- செலவுத் திட்டம் நாட்டில் இருக்கும் அனைத்து தரப்பினரும் எதிர்பார்க்கும் ஒன்றாகும். அந்தவகையில் வரவு- செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியின் அறிவிப்பு பெருந்தோட் மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டம் ஒன்றின் மூலம் பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருப்பது வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும் என்றே நினைக்கிறேன். அதனால் ஜனாதிபதிக்கு எமது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் அரசாங்கத்தில் இருக்கும் அனைவரும் அக்கறையும் அனுதாபமும் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இந்த அனுதாபத்தை நிறைவேற்ற வேண்டும். அதனால் இந்த சம்பள அதிகரிப்பை நிறைவேற்றுமாறு ஜனாபதிக்கு சொல்லுங்கள். பெருந்தோட்ட மக்களுக்கு சம்பள அதிகரிப்பாக கம்பனிகளிடமிருந்து 200 ரூபாயும் அரசாங்கத்திடமிருந்து 200 ரூபாயும் வழங்குவதாக ஜனாதிபதி வாக்குறுதி அளித்திருக்கிறார்.

அரசாங்கம் வழங்க தீர்மானித்த 200 ரூபாய்க்கு நாங்கள் எமது பூரண ஆதவை வழங்குவோம். எமது மக்களுக்கு ஏதாவது கிடைப்பதற்கு யாராவது எதிர்ப்பு என்றால், அதற்கு நாங்கள் இணங்கமாட்டோம். சில வேளை நாங்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவும் இடமிருக்கிறது. அதுதொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை.

அதேநேரம் 25 நாட்கள் தொழிலுக்கு சென்றால்தான் இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்றால், அதற்கு நாங்கள் எதிர்ப்பு. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. கம்பனிகள் 25 நாட்கள் வேலை வழங்குவதாக தெரிவித்து, 20 நாட்கள் மாத்திரம் வேலை வழங்கிவிட்டு, இந்த 200 ரூபாய் வழங்குவதை நிறுத்த முடியாது. அவர்கள் ஒரு நாள் வேலைக்கு வந்தாலும் அவர்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். இதற்கு அரசாங்கம் உத்தரவாதம் வழங்க வேண்டும்.- என்றார். (எ)

# பொருளாதாரத்தை முன்னிறுத்தி அன்னையர் ஆதரவு குழு கூட்டம்

சாய்ந்தமருது, நவ. 15

சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய, கல்முனை பிராந்திய தாய் சேய் நலப்பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி பி. டானியலின் ஏற்பாட்டில் "அன்னையர் ஆதரவு குழு கூட்டம்" நேற்று முன்தினம் நடைபெற்றது.

சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி ஜே.மதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது விவசாய விரிவாக்க காரியாலய விவசாய போதனாசிரியர்களால் வீட்டுத் தோட்ட செய்கையின் மூலம் குடும்பங்களின் வருமானத்தை உயர்த்துவது மட்டுமல்லாது, ஆரோக்கியமான உணவையும் தங்கள் குடும்பத்துக்கு உற்பத்தி செய்து வழங்க முடியும் என்பதையும் தேவையான பயிர் வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதனையும் தெளிவுபடுத்தி அன்னையர் ஆதரவு குழு உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தும் வழிகளையும் சுட்டிக்காட்டினர்.

மேலும், சுயதொழில்களை ஊக்குவிக்கும் வழிகாட்டல்கள், சிறு அளவிலான தொழில் முயற்சிகள், மற்றும் பெண்கள் தன்னம்பிக்கையுடன் சமூக முன்னேற்றத்தில் பங்கு எடுக்க வேண்டிய அவசியம் போன்றவை குறித்தும் முக்கியமான வழிகாட்டல்கள் இதன்போது வழங்கப்பட்டன. "வீட்டுத்தோட்டம் என்பது ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் இரட்டை பலன்களை வழங்கும் சிறந்த வழி, வீட்டில் காய்கறி, பழம் தரும் மரங்கள், கீரை போன்றவற்றை வளர்ப்பதன் மூலம் சத்தான உணவைப் பெற முடியும். இதுவே குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் சிறந்த வழிமுறையாகும்."

என்பது பற்றியும் விளக்கங்கள் வழங்கப்பட்டன. (எ-06)

# சர்வதேச நீரிழிவு தின விழிப்புணர்வு நிகழ்வு

சாய்ந்தமருது, நவ. 15

உலகளவில் ஆண்டு தோறும் நவம்பர் 14ஆம் திகதி அனுசரிக்கப்படும் சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு, சாய்ந்தமருது பிரதேச மருத்துவமனையில் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று சிறப்பாக நடைபெற்றது.

பிரதேச மருத்துவமனை பொறுப்பு மருத்துவர் எம்.கே. சனூஸ் காரியப்பர் தலைமையில் மருத்துவமனை நீரிழிவு கட்டுப்பாட்டு பிரிவு மருத்துவ குழுவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகிலா இஸ்ஸதீன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், தாதியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்று, பொதுமக்களுக்கு நீரிழிவு நோயின் அபாயங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

# ட்ராக்டர்- மோ. சைக்கிள் மோதி கோர விபத்து

## ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, நவ. 15

கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, பதுளை - செங்கலடி வீதியின் மரப்பாலம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை மஹாஓயாவிலிருந்து செங்கலடி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், எதிர் திசையில் இருந்துவந்த டிராக்டரில் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் டிராக்டர் சாரதி காயமடைந்து கரடியனாறு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிள் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கரடியனாறு, இராஜபுரத்தைச் சேர்ந்த 46 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# மாணவர்கள் மீது குளவி கொட்டியதில் ஆறு பேர் மருத்துவமனையில் அனுமதி

நுவரெலியா, நவ. 15

நுவரெலியா, பொகவந்தலாவ மோரா தோட்டத்தில் நடைமுறைப் பயிற்சிக்காக வந்த ருஹூணு பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் குழுவை நேற்றுக்காலை குளவிகள் கொட்டியதில், ஆறு மாணவர்கள் காயமடைந்து பொகவந்தலாவ பிராந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

களப்பயணத்தின் போது மாணவர்கள் தேயிலைத் தோட்டத்தில் மரத்தில் கட்டப்பட்டிருந்த குளவி கூட்டை கலைத்ததால் குளவிகள் அவர்களை கொட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த மாணவர்கள் அனைவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொகவந்தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரணிகள்...

உரையாற்றுகையிலேயே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டு எதிரணி எனக் கூறிக்கொள்ளும் தரப்பினரால் எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆட்சியைக் கவிழ்ப்பது பற்றியும், கொழும்பை சுற்றிவளைப்பது குறித்தும் தற்போது கதைக்கின்றனர். அவர்களின் நகர்வுகள் எமக்கு சவால் அல்ல.

எப்படி போராட்டம் நடத்த வேண்டும், எப்படி பேரணி நடத்த வேண்டும் என செய்து காட்டியவர்கள் நாம். எனவே, 3000 ,4000 பேரை திரட்டி எம்மை மிரட்ட முடியாது.

பேரணி பார்க்க வேண்டுமானால் நாமும் நடத்தி காட்டுகின்றோம். அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக 5 ஆயிரம் பேரை திரட்ட முடியுமென்றால் பாதுகாப்பதற்காக 50 ஆயிரம் பேருடன் களமிறங்கும் வல்லமை எமது அரசியல் அணிக்கு உள்ளது. எனவே, எம்முடன் விளையாடவரவேண்டாம்-என்றார். (அ)

## ஜனாதிபதியுடன்...

தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தை அறிவித்த வேளை, இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய வாக்கெடுப்பில், எங்கள் தமிழரசுக் கட்சி அரசு சார்பாகவும் இல்லை. அரசுக்கு எதிராகவும் இல்லை.

வாக்கெடுப்பில் இருந்து விலகுகின்கிறோம்.

ஜனாதிபதியுடன் அடுத்த வாரம் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்ய இருப்பதாக அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில்தான், 2026 வரவு-செலவுத் திட்ட வாக்களிப்பதைத் தவிர்த்துள்ளோம்.

ஜனாதிபதி எங்கள் பிரச்னைகளை தீர்க்க முன்வருவார். தமிழர் அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வு காண முயல்வார். எமது மக்கள் நீண்ட காலமாக எதிர்பார்க்கும் புதிய அரசியலமைப்பை கொண்டு வருவார். பிரச்னைகளில் பாதிக்கப்பட்ட சமூகத்தின் கருத்துகளை கேட்பார்-என்றார். (அ)

## பிரிட்டன்...

இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இம்மாதம் 21 ஆம் திகதி பிரித்தானியாவுக்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளதுடன், இதன்போது அதுபற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அரசியல் பிரிவின் முதனிலை செயலாளர் டொம் சொப்பர், அரசியல் ஆலோசகர் இன்ஷாப் மாகர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவம் செய்து சட்டத்தரணி மது கல்பனா ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## வாக்கெடுப்பிலிருந்து...

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு சமஷ்டி அடிப்படையில் வழங்கப்பட வேண்டும், அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் பூர்த்தியாக வேண்டும் என்ற விடயங்களுக்காக இலங்கை தழிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டது.

மேலும், இலங்கை தமிழரசுக் கட்சிக்கு, தமிழ் மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

அரசாங்கத்தை நாங்கள் ஆதரிக்கவேண்டும் அரசாங்கத்துடன் நாங்கள் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதை இலங்கை தமிழரசுக் கட்சி நினைக்க முடியாது.

அரசாங்கத்தால் செய்யப்படும் நல்ல விடயங்களை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் ஜனாதிபதி மீது உள்ள நம்பிக்கையின்மையால் நாங்கள் பாதீட்டு மீதான வாக்கெடுப்பில் இருந்து விலகுகிறோம்-என்றார். (அ)

## 118 மேலதிக...

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுச்சாமி இராதாகிருஷ்ணன், மனோ கணேசன், பழனி திகாம்பரம் உள்ளிட்டவர்கள் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பை கருத்தில் கொண்டு பாதீட்டுக்கு ஆதரவளித்ததாக அவர்கள் குறிப்பிட்டனர்.

மேலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் பாதீட்டுக்கு ஆதரவளித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எம்.பிக்கள் வாக்களிப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்தனர். (அ)

# உரமானியம் கிடைக்காமல்விடவோ தாமதமடையவோ காரணம் இல்லை!

### கமநல அபிவிருத்தி ஆணையர்

கொழும்பு, நவ. 15

உரமானியம் கிடைக்காமல் விடவோ அல்லது தாமதமாகவோ எந்தக் காரணமும் இல்லை என கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் தம்மிக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உர மானியத்தை வழங்குவதற்குத் தேவையான போதுமான நிதி கமநல அபிவிருத்தி திணைக்களத்திடம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்போகத்துக்கான உர மானியத் திட்டம் கடந்த 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகவும் இதன் கீழ் நெல் பயிரிடும் விவசாயிக்கு 25 ஆயிரம் ரூபாய் நிதி மானியம் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மானியம் இரண்டு தவணைகளாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், போக கூட்டம் நடத்தப்பட்டு, விவசாயிகளின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு கமநல சேவை நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டவுடன் முதலாம் தவணையாக 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

இரண்டாவது தவணையாக உள்ள மீதி 10 ஆயிரம் ரூபா நெல் செய்கை வயலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் வழங்கப்படும்.

சுமார் 14 இலட்சம் விவசாயிகளுக்கும் அதாவது, சுமார் 8 இலட்சம் ஹெக்ரெயர் நெற்காணிகளுக்கும் இந்த மானியத் திட்டத்தின் கீழ் உதவிகளை வழங்கப்படும். இதற்காக அரசாங்கத்தால் 2 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

உர மானிய திட்டத்தின் கீழ் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 974 விவசாயிகளுக்கு 197.6 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# வாகன இறக்குமதி வரி மூலமாக ரூ. 10 ஆயிரம் கோடி வருமானம்!

கொழும்பு, நவ. 15

வாகன இறக்குமதி வரி மூலம் எதிர்பார்க்கப் பட்ட வருமானத்தைவிட 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிக வருமானம் இந்த ஆண்டில் ஈட்டப்பட்டுள்ளதாக பாராளுமன்றத் தொடர் பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், எதிர்வரும் 2026 ஆம் ஆண்டுக்கான எதிர்கால நிதிசார் திட்டங்களைத் தயாரிப்பது இலகுவாகியுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், வாகன இறக்குமதி வேகம் குறை வடைவதால் 2026ஆம் ஆண்டில் வருமான அதிகரிப்பு வேகமும் குறைவடையும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தல்...

அரச சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

அரச துறையில் 34 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் தான் பதவி விலகுவதாக அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அனைத்து...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவற்றில் நான்கு வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்றன. முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளும் மேல்மாகாணத்தில் உள்ள அவிசாவளை, கம்பஹா மற்றும் ஹொரண ஆகிய மருத்துவமனைகளின் நிர்வாக செயற்பாடுகள் சுகாதார அமைச்சின் கீழ் அல்ல மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. இவ்வாறான பூரண சிகிச்சை முறைகளைக் கொண்ட அனைத்து மருத்துவமனைகளின் சேவைகளையும் சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வந்தால் இலகுவாக இருக்கும். தாதியர்களுக்கான பிரச்சினைகளுக்கு கூட தீர்வு வழங்க முடியும். நாங்கள் 4,114 தாதியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் மாகாண சபைகளில் இன்னும் தாதியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகிறது. நாங்கள் சுகாதார பணிப்பாளருக்கு தாதியர்கள் தொடர்பில் பரிந்துரைக்கப்பட்டாலும், அங்கு பணியாளர்கள் நிரம்பியுள்ளனர். எனவே இந்த மருத்துவமனைகளை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கு எங்களுக்கு விருப்பம் உள்ளது. அதற்காக வட மாகாண மற்றும் மேல் மாகாண சபைகளின் அனுமதி அவசியமாகிறது. நாங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளோம் எனவே அதற்கான அனுமதி கிடைக்க வேண்டியது அவசியம்-என்றார். (அ)

## வடக்கு

முன்வைக்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பள அதிகரிப்பை நாங்கள் எதிர்க்கவில்லை. பெருந்தோட்ட தமிழர்களுக்கும், வடக்குத் தமிழர்களுக்கும் வரலாற்று காலம் முதல் இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் உரையாற்றுகிறாரா என்று எனக்குத் தோன்றியது.

அரச நிறுவனங்களை மறுசீரமைக்க ஒருபோதும் இடமளிக்க போவதில்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் யோசனைகளை வரவு - செலவுத் திட்டத்தின் முன்வைத்துள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் உண்மை முகத்தை வெளிப்படுத்தியதையிட்டு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அட்டைப்பூச்சி இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதை போன்று வரிகளை விதித்து திறைசேரி நிரம்பியுள்ளது. இதனை தவிர்த்து தேசிய உற்பத்திகள் அல்லது வெளிநாட்டு முதலீடுகளினால் திறைசேரியின் கையிறுப்பு அதிகரிக்கப்படவில்லை.

வரிகளையும், அத்தியாவசிய பொருட்களின் விலைகளையும் அதிகரித்து தேசிய கையிறுப்பை அதிகரிக்க முடியும். அதேபோல் ஒதுக்கப்பட்ட நிதியை செலவு செய்யாமல், வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்யவும் முடியும்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒன்றுமில்லை. போலியான வாக்குறுதிகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை அபிவிருத்தி திட்டங்களுக்கு பயன்படுத்துங்கள்.

வடக்குக்கு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளுங்கள். அதனை விடுத்து போலியான குற்றச்சாட்டுக்களையும், வாக்குறுதிகளை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருக்காதீர்கள்-என்றார். (அ)

## இலங்கைக்கான...

நிர்வாக சபையால் மதிப்பாய்வு அங்கீகரிக்கப்பட்டவுடன், இலங்கைக்கு 347 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும்.

இதற்கான கூட்டம் வரும் வாரங்களில் நடைபெறும் என்று தாம் எதிர்பார்ப்பதாகக் கோசாக் கூறியுள்ளார்.

இலங்கையில் அண்மையில் அறிவிக்கப்பட்ட பாதீட்டில், 2026 ஆம் ஆண்டுக்கான 7 வீத வளர்ச்சி இலக்கை அரசாங்கம் நிர்ணயித்துள்ளது.

இது, சர்வதேச நாணய நிதிய, நிரல் அளவுருக்களுடன் ஒத்துப்போகிறதா என்பதைத் தீர்மானிக்க நிதியம் தற்போது மதிப்பாய்வு செய்து வருவதாகக் கோசாக் குறிப்பிட்டுள்ளார். (அ)

## அநாகரீகமான...

பிரயோகங்களை பயன்படுத்துவதை தொடர்ச்சியாக தாம் அவதானித்து வருவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

அவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள் பாராளுமன்ற கௌரவத்தை சீர்குழைப்பதுடன், வேதனைப்படக்கூடிய விடயமாக கருதுவதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

அதன்படி ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களை தனிப்பட்ட ரீதியில் பெயர் கூறியும், அவர்களை இலக்கு வைத்தும், அநாகரீகமான வார்த்தைப் பிரயோகங்களை இனிவரும் காலத்தில் சபையில் பயன்படுத்தக்கூடாது என சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன எச்சரித்துள்ளார்.

நாட்டின் உயர்பீடமாக திகழும் நாடாளுமன்றத்தின் ஒழுக்கத்தை உரியமுறையில் பேணுவதற்கு, மக்கள் பிரதிநிதிகள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் சபாநாயகர் கோரியுள்ளார். (அ)

## பொது...

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு தமது ஒத்துழைப்பை வழங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவும் இதன்போது தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நினைவூட்டவே நுகேகொடை பேரணி!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, நவ. 15

**எதிர்வரும் 21ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள அரசாங்க எதிர்ப்பு பேரணி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கத்துக்கு நினைவூட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இந்தப் பேரணியில் சிறீ லங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பிவித்துரு ஹெல உறுமய உள்ளிட்ட பல கட்சிகள்இணைய ஒப்புக்கொண்டுள்ளன என்றும் அவர் கூறினார். இந்நிலையில் ஏனைய கட்சிகளின் பங்கேற்பு குறித்து அந்தந்த கட்சிகளின் உள் பேச்சுகள் முடிவடைந்த பின்னர் முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினருடன் கட்சித் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்றன. மேலும், கொழும்பு மலர் வீதியில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி பணிமனையில் ஐக்கிய தேசியக் கட்சியினருடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

பல எதிர்க்கட்சிகள் ஏற்கனவே இந்தக் கலந்துரையாடலில் இணைந்துள்ளன. மேலும், பல கட்சிகள் பேரணியில் சேர இணக்கம் வெளியிட்டுள்ளன.

மற்றக் கட்சிகளின் பங்கேற்பு அவர்களின் உள்ளக கலந்துரையாடல் முடிந்த பிறகு அறிவிக்கப்படும். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தும் நோக்கில் நடைபெறும் இந்தப் பேரணியில் அரசாங்க கொள்கைகளால் பாதிக்கப்பட்ட பலர் இணைவார்கள் - என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (ஐ)

# துப்பாக்கிகளுடன் நால்வர் கைது!

கொழும்பு, நவ. 15

சட்டவிரோத துப்பாக்கிகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பதுளை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பணிமனை தெரிவித்துள்ளது.

ரிதீமாலியத்த, தலவேகமவில் உள்ள மரம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியுடன் 35 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹிகுருகடுவ, நாரன்கும்புர பகுதியில் இரு துப்பாக்கிகளுடன் 51 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதேபோல், கந்தேகெதர, தெஹிகொல்லகந்துர பகுதியில் வீட்டில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியுடன் 52 வயது நபர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், லுணுகலையில் நெல் வயல் ஒன்றில் மறைத்து வைத்திருந்த 58 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# போதைப்பொருள் வியாபாரம் எதிரிக்கு ஆயுள்கால தண்டனை

மன்னார், நவ. 15

20 கிராம் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை, வியாபாரம் செய்தமை தொடர்பான வழக்கில், எதிரிக்கு ஆயுள் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தக் குற்றம், கடந்த 202 டிசெம்பர் மாதம் இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு, புதன்கிழமை மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம். மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில், வழக்கு தொடுநர் தரப்புக்காக அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் முன்னிலையாகி வழக்கை நெறிப்படுத்தினார். எதிரி தரப்புக்காக ஜனாதிபதி சட்டத்தரணி யு. ஆர். டி. சில்வா முன்னிலையாகியிருந்தார்.

வழக்கு விசாரணைகளின் முடிவில், வழக்குத் தொடுநர் தரப்பால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இதனையடுத்து, எதிரியை குற்றவாளியாக அறிவித்த நீதிபதி எதிரிக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (அ)

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூடு; மேலும் இரு சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, நவ. 15

கொட்டாஞ்சேனையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 16ஆவது சந்தி பகுதியில் ஒருவரை சுட்டுக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர் கடந்த 7 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

குறித்த விசாரணைகளுக்கமைய, துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு உதவிய காரின் சாரதி, குற்றத்தைச் செய்ய தங்குமிடம் வழங்கிய சந்தேக நபர்களே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் கொழும்பு 13 மற்றும் மஹரகம பகுதிகளைச் சேர்ந்த 27 மற்றும் 32 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# பாதாள உலக குழுவை சேர்ந்த இருவர் கைது!

கொழும்பு, நவ. 15

பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான "டுபாய் தனுஷ்க" என்பவரின் சகாக்கள் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு வெல்லம்பிட்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 200 கிராம் 590 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இலங்கை தொழிலாளர் இஸ்ரேலில் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 15

இஸ்ரேலில் 38 வயதான இலங்கை தொழிலாளர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலியைச் சேர்ந்த குறித்த நபர் இரண்டு மாதங்களுக்கு முன்பு கட்டுமான பணிகளுக்காக இஸ்ரேலுக்கு சென்றுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த மரணம் குறித்து இஸ்ரேல் பொலிஸின் இன்டர்போல் கிளை தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தவர் இலங்கை அரசாங்கத்தின் வேலை வாய்ப்பு முகவரகம் ஊடாக இஸ்ரேலுக்கு சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சிறீலங்கன் எயார்லைன்ஸ்க்கு 5 மாதங்களில் ரூ. 1260 கோடி இழப்பு

கொழும்பு, நவ. 15

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இழப்புகள், 2025/26 நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் (ஒகஸ்ட் மாதத்துடன் முடிவடைந்தது) ஆயிரத்து 260 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சரக்கு வருவாய் வீழ்ச்சி, விமான பராமரிப்பு செலவு அதிகரிப்பு ஆகியவையே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, ஏப்ரல் முதல் ஒகஸ்ட் வரையிலான காலகட்டத்தில், வலுவான பயணிகள் தேவை மீட்சி காரணமாக சிறீ லங்கன் எயார்லைன்ஸ்ஸின் பயணிகள் வருவாய் 7 வீதம் அதிகரித்து 9 ஆயிரத்து 540 கோடி ரூபாயாக உயர்ந்தது.

பயணிகள் பொதிகள் 76.4 வீதத்திலிருந்து 82.6 வீதமாக மேம்பட்டதுடன் பயணிகள் எண்ணிக்கை 22 வீதமாக வளர்ச்சியடைந்தது இந்த உயர்வுக்கு உதவியது.

எனினும், சரக்கு வருவாய் 180 கோடி ரூபாய் குறைந்ததுடன், பிற வருமானம் ரூ 250 கோடியால் சரிந்தது. இதனால் ஒட்டுமொத்த வருவாய் வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டது.

மேலும், ஏப்ரல் முதல் ஒகஸ்ட் 2025 வரையிலான காலகட்டத்தில் செயல்பாட்டுச் செலவுகள் 3 வீதம் அதிகரித்தன. இதற்கு முக்கிய காரணம், அதிகரித்த விமானப் பராமரிப்பு, நிலையங்கள் மற்றும் போக்குவரத்துச் செலவுகளாகும்.

எரிபொருள் செலவுகள் குறைந்ததால் இந்த அதிகரிப்பு ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. நிறுவனம் விமானப் போக்குவரத்தில் ரூ. 410 கோடி இழப்பைப் புகாரளித்தது. இருப்பினும், விமான நிலையச் சேவைகள் மற்றும் தரை கையாளுதல் மற்றும் பயிற்சி உட்பட பிற வருமானங்களைக் கணக்கில் கொண்ட பிறகு, இது ரூ. 490 கோடி இலாபமாக மாறியது.

சிறீ லங்கன் கேட்டரிங் மூலம் ரூ. 260 கோடி நிகர வருமானம் மேம்பட்ட போதிலும் மூமத்தின் நிகர இழப்பு ஒகஸ்ட் மாத இறுதியில் ஆயிரத்து 260 கோடி ரூபாயாக பதிவானது.

இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட ரூ. 420 கோடி இழப்புடன் ஒப்பிடுகையில் மிக அதிகம். இதற்கு முக்கிய காரணம், ரூ 850 கோடி மதிப்புள்ள குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணி இழப்புகள் மற்றும் அதிக நிதிக் கட்டணங்கள் ஆகும் என்று நிதி அமைச்சு கூறியுள்ளது. (ஐ)

# பீடி இலை, சவர்க்காரம் கற்பிட்டியில் கைப்பற்றல்!

கொழும்பு, நவ. 15

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 840 கிலோ பீடி இலைகளும் சவர்க்கார கட்டிகளுடன் கெப் ரக வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

கடற்படையினர் புத்தளம் - கற்பிட்டி கடற்கரையில் முன்னெடுத்த சிறப்பு நடவடிக்கையிலேயே இவை கைப்பற்றப்பட்டன.

மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 840 கிலோ பீடி இலைகளும் 1,940 சவர்க்கார கட்டிகளும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேசிய மக்கள் சக்திக்கு புதியதலாவையிலும் தோல்வி

கொழும்பு, நவ. 15

தேசிய மக்கள் சக்தியின் பதியதலாவ பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளது.

பிரதேச சபையின் தவிசாளர் அநுர ராஜபக்ஷவினால் வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன், அதில் வரவு -செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 8 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் கிடைத்தன. பதியதலாவை பிரதேச சபையின் மொத்த சபை அங்கத்தவர் எண்ணிக்கை 20 ஆகும்.

இதேவேளை, தனமல்வில பிரதேச சபையின் வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக 17 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் கிடைத்தன. வாக்குகள் சமனானதன் காரணமாக, அதன் பின்னர் தவிசாளரின் வாக்கையும் பெற வேண்டியிருந்தது.

இதன்படி, தவிசாளரின் வாக்கு கிடைத்த பின்னர், தேசிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட தனமல்வில பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் வெற்றி பெற்றுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org